# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
தை 19
ஸபர் 22
புதன் (1-2-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 68
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35




## பெப்ரவரி நான்கு

# விடுதலை நாளா? வேதனை நாளா?

அன்பு நண்பா

விழாக் கோலம்!
கண்ணைக் கவர்ந்திடும் வண்ண
ஜோடனைகள்!
இயல், இசை, ஆடல் பாடல்கள்!
வீரர்களின் அணிவகுப்பு!
வேழங்களின் அணிவகுப்பு, ஊர்வலம்!
ஆனந்த சுதந்திரம் அடைந்தநாள்
இஃதென்று எக்களிப்பு! இன்பகீதம்!

ஆம், பெப்ரவரி 4ம் நாளில் சிங்களநாடு விடுதலை நாள் விழா எடுக்கிறது இன்னபிற கொண்டாட்டங்கள் — ஆடம்பரங்களுடன்! சிங்கள அரசு அமைந்திருந்த கண்டிமாநகரில் சிங்களவர் விடுதலை நாள் விழா எடுக்கின்றார்! வெற்றிக் கீதம் இசைக்கின்றார்;

அன்று கோட்டை அரசும், கண்டி அரசும் கொண்டிருந்தோம் நாம்; இன்று அந்த இரு அரசுகளையும் மீளப் பெற்றுவிட்டோம்—அதுமட்டுமா? தமிழ் ஈழ அரசும் நம் ஆளுகைக்கு கீழே தான் இன்று இருக்கிறது என்கிற அதிகாரத்திமிருடன் சிங்கள இனம் விழா எடுத்து மகிழ்கிறது பெப்ரவரி 4ல் விடுதலை நாள் விழா!

சிங்களவர்களுக்கு இரண்டு விடுதலைவிழாக்கள்! சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி வந்தால் 'மே 22' அவர்களது விடுதலைநாள் விழாவாக கொண்டாடப்படுகிறது; ஐக்கியதேசிய கட்சி ஆட்சிபீடமேறும் போது பெப்ரவரி 4 விடுதலை நாள் விழாவாகி விடுகிறது!

ஆனால் நமக்கு — தமிழினத்துக்கு இந்த இரண்டு நாட்களுமே வேதனை நாள்—கரிநாள்—துக்கநாள்—துயரநாளன்றோ?

அந்நிய ஏகாதிபத்தியம்—ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்றிடின் இலங்கைத்தீவு விடுதலை பெற்றிடின்—நாமும் உரிமை வாழ்வு வாழ்ந்திட முடியும் — நம்மை நாமே ஆண்டிட முடியும்—என்ற நம்பிக்கையுடன் ஆங்கிலேயன் என்ற பொது எதிரியை விரட்டிட சிங்கள இனத்துடன் தோளோடு தோள்நின்று அன்று போராடினர் நம் மூத்த தலைவர்கள்!

ஆனால் நடந்தது என்ன? கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது — பிள்ளையார் பிடித்திட அது குரங்காய் முடிந்தது!

அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் வெற்றியீட்டினோம் — 1948 பெப்ரவரி 4ல் ஆங்கிலேயன் அகன்றான்! எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு என்றோம். அப்படிச் சொல்லி வாய் மூடுவதற்கு முன் மற்றோர் ஏகாதிபத்தியம் நம் வாயை தனது இரும்புக் கரங்களால் பொத்தியது!

ஆம் நாமே ஆளுமினம் — நீங்கள் ஆளப்படுமினம்; நாமே நாட்டின் எஜமானர்கள்—நீங்கள் அடிமைகள்; நாமே பெரும்பான்மை; நீங்கள் சிறுபான்மை—என்று தமிழினத்தைப் பார்த்து உறுமியது புதிய சிங்கள ஏகாதிபத்தியம்!

வெள்ளையன் அமர்ந்திருந்த அதே ஆதிக்கக் கதிரையில் சிங்களவன் அமர்ந்து கொண்டான்; வெள்ளையன் அணிந்திருந்த அதே சப்பரத்துக்குள் புதிய கொள்ளையன் புகுந்து கொண்டான்; ஒரு எஜமானை விரட்டினான் தமிழன்; ஆனால் அவன் அமர்ந்திருந்த அதே இடத்தில் புதிய எஜமானன் அமர்ந்து கொண்டான்!

இத்தகைய துயரம் தோய்ந்த—ஏமாற்றம் நிறைந்த நாள் தான் பெப்ரவரி நான்கு!

வெள்ளையனை வெளியேற்ற தமிழன் போர்க்கொடி உயர்த்தினன்; ஆங்கில ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை முறித்தெறிந்தான்; 1948 பெப்ரவரி நாளில் வெள்ளையனை வெளியேற்றினன்—ஆனல் அத்துடன் தமிழனுடைய விடுதலைப்போராட்டம் முற்றுப்பெறவில்லை—முடிவடையவில்லை; கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது!

சிங்களவர்களுடைய நாட்டு விடுதலைப் போராட்டம் 1948 பெப்ரவரி நான்குடன் முற்றுப் பெற்று விட்டது; தமிழனுடைய நாட்டு விடுதலைப் போராட்டம் பெப்ரவரி 4க்கு பின்னரும் கடந்த 30 ஆண்டுகளாக நீடித்து வருகிறது! கடந்த 30 ஆண்டுகளில்—

15 இலட்சம் தமிழர்கள் வாக்குரிமை குடியுரிமையை இழந்தோம்—

சிங்கள ஏகாதிபத்திய காலனித்துவ அரசின் சுரண்டல் கொள்கையால்—திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் விளைவாக — ஏறத்தாழ இரண்டாயிரம் சதுரமைல் தமிழ் ஈழ புனித மண்ணை இழந்தோம்!

கொடூர ஏகாதிபத்திய சட்டமான சிங்களம் மட்டும் சட்டத்தினல், நம் கண்ணினுமினிய தமிழ் தாயின் மானம் பறிக்கப்பட்டது கண்டோம்! நம் மீது அடிமைகள் என்ற முத்திரை குத்தப்பட்டது இச்சட்டத்தினல்!

முப்பது ஆண்டுகளாக பல்வேறு சமயங்களில் நடைபெற்ற சிங்கள ஏகாதிபத்திய இனவெறிக் கொலையின் காரணமாக பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அவ்வப்போது சிங்கள இனவெறியர்களாலும், இன வெறி பிடித்த பொலிஸ். இராணுவப்படைகளாலும் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டனர்!

## அரசியல் மேடை

தமிழ் பெண்களின் மானம் குரூரமாகப் பறிக்கப்பட்டு, கற்பு சூறையாடப்பட்டது! தமிழர்கள் சொத்துக்கள், சூறையாடப்பட்டன!

சிங்கள நாட்டு தெருவீதிகளிலே நாய்கள் போல என் தமிழ்ச்சாதி அடித்து விரட்டப்பட்ட கொடுமைகள் நிகழ்ந்துள்ளன!

தமிழ் ஈழத் திருநாட்டில் சிங்கள ஆயுதப் படை குவிக்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டுள்ளன; ஆக்கிரமிக்கப்பட்ட பூமியாக தமிழர் நிலம் விளங்குகிறது!

தமிழனுக்கு சேரவேண்டிய தமிழ் ஈழத்தின் அரசுரிமையையும், இறைமையையும், அநீதியான முறையில் சட்ட விரோதமான முறையில் தனது ஆதிக்கப்பிடிக்குள் வைத்துக் கொண்டு, தனது படைபலத்தை கொண்டு தமிழ் ஈழமக்களின் சுதந்திர அபிலாஷைகளை நசுக்கி அவர்களை அடக்கியாள முனையும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் நெறியற்ற போக்கினை எதிர்த்துத்தான் தமிழ்மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக போராடி வருகின்றனர்!

தமிழ்ஈழ மண்ணை மீட்கின்றவரையில்—தாயகத்தின் அரசுரிமையை நிலைநாட்டுகின்றவரையில்—தமிழனுடைய விடுதலைப் போராட்டம் பூரணத்துவமடையாது என்கிற அந்த உண்மையையும் உறுதியையும் பெப்ரவரி 4ம் நாளில் நம் நெஞ்சில் இருத்துவோம்!

நண்பா, அரசியல் ரீதியாக நாம் அடிமைப் படுத்தப்பட்டிருப்பது மட்டுமல்ல—பொருளாதார ரீதியாகவும் இந்நாட்டில் தமிழ் சமுதாயம் கடந்த முப்பது ஆண்டுகளாக சிங்கள ஏகாதிபத்தியத்தினல் சுரண்டப்பட்டு வருகிறது!

மலையகத்தில், காட்டை நாடாக்கி—பொன் விளையும் பூமியாக்கியவன் பாட்டாளித் தமிழன்; அவனைச் சுரண்டி, அவனது உழைப்பிலேதான் சிங்கள ஏகாதிபத்தியம் தலையெடுத்தது; ஆனல் அவனுக்கு வயிறார உணவில்லை! இருப்பதற்கு வீடில்லை! வாழுவதற்கு, நடமாடுவதற்குக்கூட உரிமையில்லை! அரசியல் உரிமை இல்லை! முப்பது ஆண்டுகளாக மலையகத்தமிழ் தொழிலாளி சுரண்டப் பட்டுவருகிறான்!

அதுமட்டுமல்ல—தமிழ்மக்கள்— தமிழ்ஈழ மக்கள்—சோசலிச சித்தாந்தத்தை—சோசலிசப் பாதையை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்! ஆனல் இன்றோ சிங்கள (ஐ. தே. க.) அரசு, சோசலிசத்திலிருந்து முற்றுமுழுதாக விலகி, முழு முதலாளித்துவ கொள்கைகளை இங்கு புகுத்த முயற்சிசெய்கிறது! முதலாளித்துவப் பாதையில் அது செல்கிறது!

சிங்களமக்கள் தாம் சோசலிசப்பாதையிலா, அல்லது முதலாளித்துவப்பாதையிலா செல்வது என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்; ஆனல் சோசலிசத்தையே தமது இலட்சியமாக பாதையாக-வாழ்க்கை முறையாக ஏற்று, ஒரு சோசலிச தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்கு போராடிவரும் தமிழ் மக்களிடம், தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளாத முதலாளித்துவ கொள்கைகளை வலிந்து புகுத்துவதற்கு ஜே. ஆர். அரசுக்கு எதுவித தார்மீக அதிகாரமும் கிடையாது!

நண்பா, "எள்ளேன் காய்கிறது எண்ணெய்க்கு—எலிப்புழுக்கை ஏன் காய்கிறது கூடக்கிடந்தகுற்றத்துக்கு" என்று ஒரு பழமொழி சொல்வார்களே—அதேபோல தமிழ் ஈழம், சிங்கள சிறீலங்காவிலிருந்து இன்னும் விடுபடாது ஒட்டிக்கொண்டிருக்கிற காரணத்தினல் சிங்கள சிறீலங்காவின் முன் யோசனையற்ற பொருளாதார கொள்கைகளினல் ஏற்படுகின்ற பாதிப்பு, தமிழர்களை இரட்டிப்பாகத் தாக்குகிறது!

பண வீக்கம்,
விலைவாசிகள் உயர்வு
வாழ்க்கைச் சுமை
வேலையில்லாத் திண்டாட்டம்!

இத்தனை பல துன்பங்களுக்கும் தமிழனும் ஆட்படவேண்டியிருப்பதற்குக் காரணமே சிங்கள சிறீலங்காவுடன் நாம் இன்னும் ஒட்டிக்கொண்டு இருப்பதுதான்! நாம் நமது சுதந்திரத்தை மீட்டுவிட்டால், நமக்கேற்ற பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து, தமிழ் ஈழத்தை ஒரு சோசலிச சமதர்ம குடியரசாக-உலகத்துக்கொரு புதுமையாக—அமைத்துக் காட்டமுடியும்!

எனவே நண்பா, பெப்ரவரி 4ம்நாள் சிங்களவர்கள் விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிறார்கள்; நாமோ விடுதலைப் போராட்டக் களத்திலே நின்றுகொண்டிருக்கிறோம்; அவர்கள் கண்களிலே களிப்பு; நமது கண்களிலே கண்ணீர்; அவர்களுக்கு விழா மகிழ்ச்சி; எமக்கோ வேதனை நெஞ்சைக் குடைகிறது; (சிங்கள) நாட்டின் புதிய ஜனதிபதியாக முடிசூட்டுகிறார் ஜே. ஆர். ஜெயவர்த்தன; ஆனல் விடிவைநோக்கி நமது விடுதலைப்பயணம் தொடர்கிறது!

வேதனை நம் நெஞ்சை மூடுகையில் விழாக்கள் ஏன் நமக்கு? சிங்கள ஆட்சியாளரும், அவர் தம் அடிவருடிகளும் பெப்ரவரி 4ம் நாளில் ஏற்பாடுசெய்கின்ற விழாக்கள் பாடசாலைக் கொண்டாட்டங்கள், அனைத்தையும் தமிழர்கள் நாம் புறக்கணிப்போம்—பகிஷ்கரிப்போம்!

எங்கள் தமிழ் ஈழத்தை—எமதருமைத் தாயகத்தை சிங்கள வல்லாட்சியினின்றும் விடுவித்து—இலங்கைத் தீவின் விடுதலையை பரிபூரணமாக்குவதென்று அந்நாளில் உறுதி கொள்வோம்!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திரி நாடகம்
— அலஸ் —

## ஆலயம் திறக்குமா?

பாலன்! அண்ணபோனசனிக்கு முந்தினசனி பழைய பத்திரிசியார்கல்லூரிமேடையில புதிய வாழ்வு விழா நடந்தது நீ போயிருந்தனியே?

தேவன்: இல்லை என்ன விஷேசம்?

பாலன்! விசேஷம் என்ன எண்டால் யாழ் ஆயர் தியோகுப் பிள்ளையற்ற பேச்சுத்தான் விசேசம்—

தேவன்! என்ன சொன்னவர்?

பாலன்: அவர் பெரியவரிட ஞாபகார்த்த மண்டப அடிக்கல் நாட்டு விழாவுக்குப் போயிருந்தாராம், அதில் அமிர்தர் வாசிச்ச பெரியவருடைய கருத்தை எடுத்துக்காட்டிப் பேசினவர்.

தேவன்! எந்தக்கருத்தை?

பாலன்: இன விடுதலைக்கு ஒற்றுமை அவசியம், சாதி ஒழிக்கப்படவேண்டும் எண்டு பெரியவர் சொல்லியிருக்கிறாராம். அரசியலுக்கு சாதி ஒழிப்பு அவசியமென்றால் கிறிஸ்தவ வாழ்வுக்கு சாதி முற்றாக ஒழிக்கப்படவேண்டும் எண்டில்லே சொன்னவர்.

தேவன்! சரியானபோடு தான் போட்டிருக்கிறார். காலமறிஞ்சுதான் உதைச் சொல்லியிருக்கிறார்.

பாலன்: நீ சொல்லுறது எனக்கு விளங்கயில்லை.

தேவன்! நான் சொல்லுறது என்னவெண்டால் தமிழர்களுக்குள்ள இருக்கிற சாதி வேற்றுமைகளை களைஞ்சது கத்தோலிக்க மதம் தான். ஆனால் இப்ப இதே சாதிப் பிரச்சினைகளால் யாழ்ப்பாணத்தில சில கோயில்களை ஆயர்மூடிவைச்சிருக்கிறார். இனி இந்தப் பிரச்சினைகள் ஒழிஞ்சால் தான் பிறகு இந்தக் கோயில்களை திறக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

பாலன்: அப்பிடியா? அது தான்சரி.

தேவன்: இதில நாங்க வெட்கப்பட வேண்டிய இன்னுமொரு விஷயம் இருக்குது. தம்பி—தந்தை செல்வாவை பிரதிநிதியாகக் கொண்டிருந்த தொகுதி, அவரைத் தொடர்ந்து எங்கட தளபதியாரை பிரதிநிதியாகக்கொண்டதொகுதி, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையை தன்னிடத்தில் கொண்ட தொகுதி, 1975ம் ஆண்டு தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வா போட்டியிட்டு, முதன்முதல் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளிச்ச அந்தத் தொகுதியில ஒரு வேதக் கோயில் இப்ப நாலைஞ்சு வருஷமாய் சாதிப் பிரச்சினையால பூட்டிக் கிடக்குது.

பாலன்: இது கத்தோலிக்கருக்கு மட்டுமில்ல தனிநாடு கோருகிற தமிழ் இனத்துக்கே அவமானமில்லே?

தேவன்! அதுதான் நான் சொல்லுறன் அந்தக் கோயில் பெருநாள் கிட்டடியில வருகுது; இதோட எண்டாலும் அந்தப்பகுதில தாழ்த்தப்பட்டவை எண்டு புறக்கணிச்சு இருக்கிறமக்களுக்கு கோயிலிலசமஉரிமைகொடுக்கிறோம் எண்டு உயர்ந்தவையள் தாங்கள் என்று நினைக்கிற ஆக்கள் முன்வந்து ஆயரிட்ட சொல்லிஆலயத்தைத் திறக்கவேணும். இதிலையும் ஒரு பெரிய வெட்கம் என்னவெண்டால் இந்தக் கோயில் பூட்டி இருக்கிறதுக்குக் காரணம் எங்கட தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் சிலபேர் தானும் எண்டு ஆக்கள் சொல்லுறதுதான்.

# தர்மிஷ்ட' ஆட்சியில் தமிழுக்கும் தமிழர் தலைவருக்கும் பட்டைநாமம்

## ஆங்கிலத்துக்குரிய இடத்தைத்தானும் தமிழுக்கு கொடுக்கமனமில்லையா?

புதிய அரசாங்கத்தின் கொள்கை தார்மீக நெறியிலான சமத்துவ ஆட்சியை ஏற்படுத்துவதேயாகும். இது பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் பிரதமராலும், அமைச்சர்களினாலும், அரச எம். பிக்களினாலும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால் ஐ. தே. க.வின் தேர்தல் விஞ்ஞாபனமும் இப்படித்தான் கூறுகிறது.

ஆனால் நடைபெறும் அரசாங்க வைபவங்களில் இக்கொள்கைக்கு அமைவாக காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கின்றது. தேசிய ஒற்றுமையை நிலைநாட்டும் வகையில் அரசாங்கம் மும்மொழித் திட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கல்வி மந்திரி அறிவித்துள்ளார். ஆனால் இத்திட்டம் அரசாங்கத்தின் முக்கிய வைபவங்களில் அடியோடு புறக்கணிக்கப்படுகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடந்துமுடிந்த இராணுவத்தினரின் வீரதீர சாகஸ விளையாட்டுக் காட்சிகளின் போது தமிழ் மொழி புறக்கணிப்புமிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது.

இக்காட்சிகளைப் பலமைல் தூரம் கடந்துவந்து கொதிக்கும் வெயிலில் பல மணி நேரம் கால் கடுக்கக்கியூவில் நின்று டிக்கட் எடுத்துப் பார்வையிட்ட தமிழ் மக்களும் ஒருவகையில் ஏமாற்றத்தையே அளித்தது. அதற்குக் காரணம் இக்காட்சிகள் பற்றிய வருணனை தமிழில் இடம்பெறுததேயாகும். இதனால் தமிழ் மக்கள் மனவேதனை அடையக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். சகல இனத்தினருக்கும் சமத்துவம் அளிக்கப்படுமென்று வாய்கிழியச் கூறுபவர்கள் முன் மாதிரியாக இவ்வைபவத்தில் நடந்திருக்க வேண்டுமென தமிழ் மக்கள் அங்கலாய்த்தனர்.

மிகவும் சாதாரணமான முறையில் அமுல் படுத்தி இருக்க முடிந்த தமிழ் மொழி அறிவிப்பிற்கே புறக்கணிப்பு நடந்துவிட்டதென்றால் மும்மொழித் திட்ட அமுல் எவ்விதம் அமையும் என்பதை எவரும் எளிதில் ஊகித்தறியலாம். இவ் விடயம் பிரதமரின் கீழுள்ள பாதுகாப்பு அமைச்சிற்கு கீழ் நடந்துவிட்டதே என்பது தான் எம்மை ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் மிதக்க வைத்துள்ளன.

இந்நாட்டில் எந்தப்பகுதியிலும் எந்தப் பிரஜையும் வாழலாம், எவருக்கும் எந்தப்பகுதியும் சொந்தமானதல்ல என பிரதமர் ஒரு கட்டத்தில் கூறியிருந்தார். ஆனால் தலைநகரில், அதுவும் அரசாங்கத்தின் முக்கிய இந்த வைபவத்தில் இந்நாட்டில் பேசப்படும் மொழி ஒன்று புறக்கணிக்கப்பட்டு விட்டது. இந்த வைபவத்தில் வெளிநாட்டு மொழிக்கு கொடுக்கப்பட்ட அந்தஸ்து கூட இந்நாட்டு மொழிக்கு கொடுக்கப்படவில்லை. தமிழ் மொழி (பேச, விளங்கும், தெரிந்த) படாசாலைப்பிள்ளைகள் இக்காட்சியை அவதானிக்க தினமும் கூடி இருந்தார்கள். ஆனால் அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் இங்கு அறிவிப்பு இடம் பெற்றிருக்கவில்லை.

தேவையில்லாத ஆங்கிலத்தை விடுத்து தமிழிலும் சிங்களத்திலும் இங்கு அறிவிப்பை மேற்கொண்டிருக்கலாம். இதன் மூலம் சகல இனத்தினரும் சந்தோஷம் அடைந்திருக்க முடியும் முக்கியமாக சொல்லப்போனால் முப்படையிலுள்ள தமிழ் பேசும் உத்தியோகத்தர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது அந்தந்த பகுதியில் அந்தந்த மொழிதான் பேசப்பட வேண்டும் போலத் தோன்றுகிறது. இது இப்படியென்றால் அந்தந்தப் பகுதியில் குறிப்பிட்டவர்கள் தான் வாழ முடியுமா?

பிரமுகர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிதழ்களும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே காணப்பட்டன. இங்கும் தமிழ் மொழி புறக்கணிப்பு.

இம் மாதம் 18ந் திகதி முதல் 22ந்திகதிவரை இவ் வைபவம் நடைபெற்றது. ஒவ்வொருநாளும் முறையே ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் பிரதம நீதியரசர் முன்னாள் படைவீரர்கள் சங்கத் தலைவர் ஆகியோர் பிரதம அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தார்கள். இது அரசாங்க வைபவம் அதுவும் நாட்டின் பாதுகாவல் படைகள் சம்பந்தப்பட்டதால்இக் கௌரவம் கொடுக்கப்பட்டிருந்தது பொருத்தமானது, ஆனால்இக்கௌரவம் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏனோ வழங்கப்படவில்லை. குறிப்பாக சொல்லப்போனால் இலங்கைப் பாராளுமன்ற ஜனநாயகத்தில் முதல் தடவையாக தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்கிறார். தம் அரசியல் உரிமைகளுக்காகப் போராடி நொந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் இனத்திற்கு கௌரவம் அளிக்கும் வகையில் ஒரு நாளில் எதிர்க்கட்சித் தலைவரையும் பிரதம அதிதியாக அழைத்திருக்கலாம்.

இது ஒரு தகுந்த கௌரவிப்பாகவும் அமைந்திருக்கும்; இந் நாட்டின் பிரதமருக்கு அடுத்தபடியாக அமைபவர் இந்த எதிர்கட்சித்தலைவர் அதுவும் ஒரு தமிழர். அத்தகையவரைக் கௌரவிப்பது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் பொருத்தமாக இருந்திருக்கும். பிரதமர், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பல வைபவங்களில் எதிர்க்கட்சித்தலைவர் தற்போதுகலந்துகொள்கிறார். பிரதமரும் அதை அறிவார்.

தமிழ் மொழியும் தமிழ்த் தலைவரும் முக்கிய அரசாங்க வைபவமொன்றிலிருந்து புறக்கணிக்கப்பட்ட விடயத்தை பிரதமர் அறிய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

இனிமேலாவது இவ்வாறான புறக்கணிப்புகள் நிகழாத வண்ணம் பிரதமரும் அமைச்சர்களும் கவனிக்க வேண்டுமென்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

அனஸ்டன் எட்வேர்ட்,
ஹெந்தலை,
(வீரகேசரி 27-1-78)

## சில நேரங்களில் சில மனிதர்கள்!

வவுனியா வரை 'ரஜரட்ட ரஜனி' ஓடுகிறது. எம்பி யின் கோரிக்கை கைமேல் பலன். வவுனியா மாவட்ட மக்களின்பிரயாண வசதியை முன்னிட்டு 'ரஜரட்ட ரஜனி' யின் சேவையை வவுனியா வரை நீடிக்க வேண்டுமென்று வவுனியா எம். பி, திரு. தா. சிவசிதம்பரம் நீண்ட காலமாகக் கோரிவந்தார். அண்மையில் தேசிய அரசப் பேரவையிலும் இது தொடர்பாக வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

—ஞாயிறு வீரகேசரி 15-1-78

கொழும்பில் இருந்து மதவாச்சி வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 'ரஜரட்ட ரஜனி' ரயில் வவுனியா வரை நீடிக்கப்பட்டது சம்பந்தமாக வவுனியாவில் நடைபெற்ற வைபவத்தில் ரயில் வவுனியா நிலையத்திற்கு முதல் தடவையாக வருகை தந்த போது அதனை வவுனியா ஐ. தே. க. அமைப்பாளரும் மணல், கனிப்பொருள் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர்களில் ஒருவருமானதிரு. கே.ரீ புலேந்திரன் தமது ஆதரவாளர் சகிதம் வரவேற்கிறார்.

—வீரகேசரி 24-1-78.

இப்படித்தான் சில நேரங்களில் சிலமனிதர்கள் "விழுந்தமாட்டிலே குறி சுடுகிறார்கள்" என்கிறார்கள் வவுனியா மக்கள்.

## ஏது சுதந்திரம் எங்களுக்கு!

ஏது சுதந்திரம் எங்களுக்கு—அதை
என்று கொடுத்தனன் சிங்களவன்
தீது விளைந்ததும் இத்தினத்தால்—எமை
தீயர்கள் ஆள்வதும் இத்தினத்தால்—
சூதினிலே தோற்ற பாண்டவர் யாம்—நாடு
சூழ்ச்சியில் வீழ்ந்ததை போற்றுவதோ
காது கடுக்குது கேட்பதற்கு—இந்த
கானல் சுதந்திரம் ஏன்? எதற்கு?

பாண்டவர் பத்தினி பாஞ்சாலியை—துகில்
பற்றி யிழுத்து உரிந்ததுபோல்
ஆண்டு கொண்டு உள ஆரியர்கள்—தமிழ்
அன்னை யிவளுக்கு இன்னல் செய்ய
மாண்டுமடிகிறார் மண்ணிடையே—தமிழ்
மாதர்களோ உயிர்க் கற்பிழந்தார்
வேண்டுமோ வேடிக்கை கேளிக்கைகள்—இது
வேசித்தன மின்றிவேறு என்ன?

பச்சைக் கொடியெமை ஆள்கிறது—தூய
பத்தினிபோல் வேடம் பூண்டுளது
எச்சில் இலை காட்டி ஏய்க்கிறது—அதில்
ஏக்கங் கொண்டு சில பாய்கிறது
பிச்சை எடுத்தும் நாம் வாழ்ந்திடலாம்—ஒரு
பீத்த லுடைதானும் இல்லையென்றால்
கச்சை யுடன் மட்டும் வாழ்ந்திடலாம்—அவர்
கால் தொட்டு மட்டும் நாம் வாழ்ந்திடவோ?

—நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன விடுதலைப் போராட்டம் யாருக்கும் எதிரானதன்று!"

## வரதர் நூல் வெளியீட்டு விழாவில் தமிழினத் தலைவர் அமிர் முழக்கம்!

"நாம் நடத்திவருவது இனப்போராட்டமல்ல, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக நாம் நடத்துகின்ற போராட்டம் எந்த ஒரு இனத்துக்கோ வர்க்கத்துக்கோ எதிரானதன்று. தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தையும். அதற்குள்ள பூரணசுயநிர்ணய உரிமையையும் தெற்கேயுள்ள இடது சாரிகள் முழுமையாக ஒப்புக்கொண்டு, அதை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துவார்களேயானால், தமிழ் ஈழநாட்டுக்கும் சிங்கள நாட்டுக்கும் பொதுவான பிரச்சினைகளில் சமதர்மத்தை நிலைநாட்டுவதில் சிங்கள இடது சாரிகளுடன் தோளோடு தோள் நின்று போராட நாம் தயாராக இருக்கிறோம்!"

இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வரதர் வெளியீடுகளான "செந்தமிழர் ஆகிடுவோம்" "யானை" ஆகிய நூல்களை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய தமிழினத் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

தோழர் வி. பொன்னம்பலம் எழுதிய "செந்தமிழர் ஆகிடுவோம்" என்ற அரசியல் நூலும், செங்கை ஆழியான் எழுதிய 'யானை' என்ற இலக்கிய நூலும் வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளன. இந்த இரண்டு நூல்களும் தமிழினத்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் யாழ் வீரசிங்க மண்டபத்தில் 25-1-78ல் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஓரேற்றர் சி. சுப்பிரமணியம் 'செந்தமிழர் ஆகிடுவோம்' நூலுக்கு விமர்சன உரை நிகழ்த்தினர். யாழ் வளாக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் எம். ஏ. செங்கை ஆழியனின் 'யானை' எனும் நூலுக்கு விமர்சன உரை நிகழ்த்தினர். இவ் விழாவில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"1944ம் ஆண்டே இலங்கை வாழ் தமிழ் மக்கள், தாம் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை ஒரேகுரலில் எழுப்பியிருந்தால், இன்று நாம் அடைந்திருக்கும் இக்கட்டான நிலையைத் தவிர்த்திருக்க முடியும், ஆனல் இதற்காக நாம் யாரையும் குறை கூறவில்லை. 1944ம் ஆண்டு ஈழத்தமிழினத்துக்கு விரும்பினல் பிரிந்து போகும் உரிமையையுஉள்ளடக்கிய பூரண சுயநிர்ணய உரிமை வேண்டுமென்று கோரிய கம்யூனிஸ்ட் கட்சி; ஈற்றில் படிப்படியாக கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாக தனது கொள்கையிலிருந்து வழுக்கி விழுந்து சிங்கள தீவிரவாதத்துக்கு முன் சரணகதியடைந்தது. இப்போது அரசியல் அமைப்பு தெரிவுக்குழுவுக்கு அவர்கள் முன் வைத்திருக்கும் அறிக்கையில்கூட, தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனலும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகவாழும் பகுதிகளில் தமிழர்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறர்கள், ஏனைய கட்சிகள் முன்வைத்திருப்பதை விட இது சற்று முன்னேற்றமானது தான்.

ஓர் பெண்ணுக்கு கற்பு எனும் திண்மை எப்படி அவசியமோ, அதேபோல ஓர் அரசியல் வாதிக்கும் கொள்கையுறுதி எனும் திண்மை அவசியமாகும். கற்புஇழந்த பெண் இறுதியில் எக்கதக்கு ஆளாவாளோ, அதே நிலையையே கொள்கையை பறிகொடுத்த அரசியல் வாதியும் அடைவான், இன்று இடதுசாரிகள் அடைந்துள்ள வீழ்ச்சிக்கு காரணம் அவர்கள் தங்கள் கொள்கையை விட்டு விலகியது தான்!

"தோழர் வி, பொன்னம்பலத்தின் அத்தனை கருத்துக்களுக்கும் நாம் உடன்பாடானவர்கள் அல்ல. ஆனலும் தான்நம்பிக்கைகொண்டுள்ள மார்க்ஸிய லெனினிஸ கோட்பாட்டின் அடிப்படையில் நின்று தமிழினத்தின் விடுதலைக்கு உதவ முன்வந்திருக்கிறர். நமக்கும் அவருக்குமிடையே சில கருத்துகளில் உடன்பாடு இல்லாத போதிலும், அடிப்படைச் சிந்தனையில் — அதாவது தமிழ் தேசிய இனத்துக்கு விடுதலை வேண்டுமென்பதில் —எம்முடன் ஒன்றுபட்டியங்கக் கூடிய ஒரு நிலைக்கு அவர் தம்மை மாற்றிக்கொண்டு இருக்கிறர். நமது விடுதலைப் போராட்டத்துக்கு அவர் ஒரு நேச சக்தியாக தம்மை ஆக்கிக்கொண்டு இருக்கிறர். அவரது சிந்தனையும் செயலும், இனத்தின் மீட்சிக்கு பயன்படும் ஒரு சூழ்நிலை தோன்றியிருப்பதை நாம் வரவேற்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தையும், அதற்குரிய சுயநிர்ணயஉரிமையையும் தென்னிலங்கை இடதுசாரி சக்திகள் ஏற்றுக்கொண்டு, அவற்றை பகிரங்கமாக பிரகடனப்படுப்படுத்துமேயானல்—இரு நாடுகளுக்கும் பொதுவான போராட்டத்தில் சிங்கள இடதுசாரிகளுடன்தோளோடு தோள் நின்றுபோராட நாம் தயாராக இருக்கிறேம்.

### வி. பி. பேச்சு

'செந்தமிழர் ஆகிடுவோம்' நூலாசிரியர் திரு.வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

"நான் பதினெட்டுவயதில் மார்க்ஸிய, லெனினிச தத்துவங்களை ஏற்றுக்கொண்டவன். அந்தத்தத்துவங்களின் அடிப்படையில் நின்று தமிழ் இனத்தின் விடுதலையைக் காணமுடியும் என்று நம்புகிறேன். மார்க்ஸிய, லெனினிச தத்துவங்களின் அடிப்படையில் ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றேதீர வேண்டுமென்று நான் சார்ந்துள்ள கட்சியுடன் மோதி வருகிறேன். அதில் வெற்றி பெறுவேன் என்றும் எதிர்பார்க்கிறேன்.

நான் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தபோதிலும், தமிழரசுக்கட்சி கொண்டிருந்த கொள்கை காரணமாக, அக் கட்சியின்மீது எப்போதும் எனக்கு அனுதாபம் இருந்து வந்திருக்கிறது. என்று கம்யூனிஸ்ட்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததோ— அன்று முதல் என்மனத்துக்குள் பெரும் பூகம்பம்— பிரளயம் —உருவாகியது. என்கட்சி செல்கின்றபாதை பிழையென உணர்ந்தும், அதை வெளியே சொல்லமுடியாது தவித்தேன். ஆனல் இப்போது ஒரு முடிவுக்குவந்தே, தமிழினத்தின் விடுதலை சம்பந்தமாக எனது கட்சியுடன் சண்டையிட்டு வருகிறேன்.

"கம்யூனிஸ்ட் கட்சி, சுயநிர்ணய உரிமைக் கொள்கையை ஏற்காமல் தட்டிக் கழிக்கமுடியாது. ஏனெனில் ஏனைய கம்யூனிஸ்ட் நாடுகள் எல்லாம் இனங்களின் தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றிருக்கும் போது, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி அதை தட்டிக் கழிக்கமுடியாது. அப்படித் தட்டிக்கழிக்குமானல் ஏனைய கம்யூனிச நாடுகளுக்கு அது பதில்சொல்லமுடியாது.

'நான் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஓர் நேசசக்தியாக இயங்குவேனே தவிர— புதியகட்சி எதையும் நான் ஆரம்பிக்கவில்லை. தந்தை செல்வாவை எதிர்த்து போட்டியிட்டவனுடன் கூட்டணி தொடர்புகொள்ளலாமா என்று சிலர் கேட்கிறர்கள். அரசியலில் தவறு செய்தவர்களுக்கு — பிழை விட்டவர்களுக்கு இனி மன்னிப்பே கிடையாதா? தூக்குத்தண்டனை தானு?

சுதந்திர வர்த்தக வலய மசோதாவை தேசிய பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணி கடுமையாக எதிர்த்துப்பேசிஎதிராகவாக்களித்தது. இதிலிருந்தே கூட்டணி எந்தப் பாதையில் செல்கிறது என்பதைக் கண்டு கொள்ள — புரிந்துகொள்ள முடியாதசிலர்,கூட்டணியை இன்னும் முதலாளித்துவக் கட்சி என்று கூறித்திரிகிறர்கள்.

"பெரிய இடதுசாரித்தலைவர்கள் என்றுகூறிக்கொண்டு தென்னிலங்கையில் இருப்பவர்களிடம் இருக்கின்ற சொத்துக்களை, பணத்தை விட, கூட்டணித் தலைவர்களிடம் அதிகமாக இருக்கிறதா? கூட்டணியிலுள்ளவர்கள் எவ்வளவு தூரம் ஏழையாக இருக்கிறர்கள் என்பதை நான் அறிவேன் சொத்துக்கள் மீது உட்கார்ந்துகொண்டு, தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்கள் சோசலிசம் பேசமுடியுமானல், உண்மையான ஏழைகளாக வாழ்ந்து கொண்டு, உள்ளும்புறமும் சோசலிசத்தை நேசிக்கும் கூட்டணியினர் ஏன் சமதர்மவாதிகளாக விளங்கமுடியாது?

"நான் தென்னிலங்கையிலுள்ள இடதுசாரிகளுக்கு விடுக்கும் அறைகூவல் இதுதான்—நீங்கள் தமிழ் மக்களை சமபங்காளிகளாக கருதினல்—தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை —தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும்உரிமையை முதலில் ஏற்று அங்கீகரித்து விட்டு, அப்புறம் வாருங்கள் —ஒன்றுபட்டு சோசலிசத்துக்காகப் போராடுவோம்."

---

## பன்மொழி புலவர் சுவாமி நல்லூர் ஞானப்பிரகாசருக்கு முத்திரை வெளியிட முயற்சி

பன்மொழிப் புலவரும், தமிழ் அறிஞரும், ஆராய்ச்சியாளருமான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு தபால் தலை வெளியிடும்படி கடந்த ஆட்சிக்காலத்தில் பல மன்றங்களும், இயக்கங்களும் கேட்டுக் கொண்டன. தமிழர் ஒருவரே தபால் அமைச்சராக இருந்தும் கூட சுவாமி ஞானப்பிரகாசரின் நூற்றாண்டு விழாவின் போதாகிலும் தபால்தலை வெளியிடுவதற்கு நிதி நெருக்கடி காரணமாக முடியாது என்று காரணம் சொல்லப்பட்டது. ஆனல் 75ம்ஆண்டிற்குப்பின்னர் சுமார் 20தபால்தலைகளை சாக்கைகளும், குருவிகளும் தாங்கி வெளியிட்ட செயல் தமிழினத்தை ஒருவகையில் அவமதிக்கும் செயலாகவே நாம் கருத இடமுண்டு.

ஆனல் இம்முயற்சியில் கலாச்சார ஆலோசனைக் குழுத்தலைவர் மேதகு,ஆயர். ஒஸ்வேல்ட் கோமஸ் இது பற்றிதாம்தீவிர நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக அண்மையில் உறுதியளித்துள்ளார்.இதுவிடயத்தில் துரித நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கத்தோலிக்க இயக்கங்கள்,சபைகள்,ஆயர் கோமஸ் அவர்களுக்கு விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும் அனுப்பி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஈழத்தின் தமிழ் அறிஞரான சுவாமி ஞானப்பிரகாசரை கௌரவித்து ஜேர்மனி முதலான வெளிநாடுகள் முத்திரை வெளியிட்டு இருக்கும்போது ஈழத்தில் இம்முயற்சிநடைபெறுததை யிட்டு தமிழ் சமுதாயம் வேதனைப்படுவதோடு மட்டும் நில்லாது; தமிழீழம் எங்கணும் உள்ள இயக்கங்கள்,பேரவைகள்,மன்றங்கள் இம்முயற்சியில் ஈடுபாடு கொண்டு அமைச்சரகத்தோடு தொடர்பு கொள்வதுடன் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஆயரை ஊக்குவிப்பதும் கடமையாகும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேதகு ஆயர் ஒஸ்வோல்ட் கோமஸ், கத்தோலிக்க சமயக் கலாச்சாரக்குழு, பேராயர் இல்லம்.கொழும்பு.

---

## யாழ். வளாகத்துக்கு நூல் அன்பளிப்பு

மைற் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி கோபாலபிள்ளை மாகாதேவா யாழ். வளாகத்துக்குப் புத்தாண்டுப் பரிசாக ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்திருக்கின்றார்.

அன்பளிப்பு செய்யப்பட்ட நூல்களை வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அண்மையில் கொழும்பில் பார்வையிட்டுக் கையேற்று நன்றி தெரிவித்தார்.

---


### ஓர் அறிவித்தல்!

மில்க்வைற் தயாரிப்புக்களை

அப்புத்தளை — சரவணு ஸ்ரோர்ஸ்

பதுளை — எம். எஸ். சரவணமுத்து,

பண்டாரவளை — குகன் ஸ்ரோர்ஸ்.

ஆகிய வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள வகுப்புக்களை பகிஷ்கரிக்குமாறு தமிழ் இளைஞர் பேரவை கோரிக்கை!


வெளிவருகிறது! ஒளிதருகிறது!!

**மெழுகுவர்த்தி**

மேட்டுக்குடியிலே முகிழ்த்த ஒரு மனிதன், தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த சுகவாழ்வையும் புவன போகங்களையும் புறக்கணித்துவிட்டு தமிழ் விடுதலைப் போரின் ஈட்டிமுனையாக மாறினான். அந்த மறவனுடன் இலட்சியப்பாதைவழியே வழித்துணை சென்ற ஒருவனின் நாட்குறிப்புகள் இது.

நூலாசிரியர்: **கரிகாலன்**

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் மதிப்புரையுடன்

- 5-2-1978 ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூரில் அமரர் நாகநாதன் நினைவு விழாக் கூட்டத்தில் வெளியிடப்படுகிறது.
- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நினைவு விழாவில் உரையாற்றுகிறார்கள்.


தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் புகுத்தப்பட்டால், சிங்கள வகுப்புக்களைத் தொடர்ந்து பகிஷ்கரிக்குமாறு தமிழ் மாணவ மாணவியரை தமிழ் இளைஞர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தை திணிப்பதை கண்டித்து தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் அதன் அமைப்புச் செயலாளர் மாவை சேனாதிராசா ஓர் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளார், அத்துண்டுப் பிரசுரத்திலேயே சிங்கள வகுப்புக்களை பகிஷ்கரிக்குமாறு தமிழ் மாணவ மாணவியர் கோரப்பட்டுள்ளனர்.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

மாணவ நன்மணிகளே!

சிங்காரத் தமிழின் சங்காரம் கருதிச் சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பாடசாலைகளுக்கு வருகை தருவதென்றால்...

"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும்விடாதே" என்ற பாரதிதாசன் கூற்றுச் சரியென்றால்...

தமிழைப் பழிக்கவல்ல— அழிக்க வரும் சிங்கள ஆசிரியர்களைத் தமிழீழம் வர விடாது தடுத்து நிறுத்துவதில் தவறென்ன?

தடை கடந்து ஆளும் இனம் என்ற திமிரோடும் ஆயுதப்படையோடும் சிங்கள ஆசிரியர் வருகை தந்தால்...

வகுப்புகளைத் தொடர்ந்து பகிஷ்கரியுங்கள்!

வரிசையாய் எழுந்துவெளியே செல்லுங்கள்!!

மும்மொழித் திட்டத்தை மீளப்பெறும் வரை—சிங்கள ஆசிரியரை முற்றாக வெளியேற்றும்வரை மும்முரமாக —முழுமூச்சாக — மூர்த்தன்னியமாகத் தேவையான எதிர்ப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துங்கள்!

சிங்கள வகுப்புகளை மானமுள்ள மாணவர்களே! தொடர்ந்தும் பகிஷ்கரியுங்கள்!

பள்ளிகளில், பல்கலைக் கழகங்களில், பட்டி தொட்டிகளிலெல்லாம் இளைஞர் பேரவை, மாணவர்பேரவை, மாதர் பேரவைக் கிளைகளை நிறுவி எங்கள் அமைப்பைப் பலப்படுத்துங்கள்! இன விடுதலை அணியை வலுப்படுத்துங்கள்!!

# மும்மொழித் திட்டத்தை முறியடித்தவர் அண்ணா

## யாழ் கருத்தரங்கில் சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

"தமிழ் நாட்டில் இந்தியைத்திணிப்பதற்கு முப்பதாண்டு காலமாகதொடர்ந்து இந்தியமத்திய அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளையெல்லாம் முறியடித்து தமிழினத்தின் தனித்துவத்தை காத்த பெருமைஅறிஞர் அண்ணாவுக்கே உரியது. 1968ம் ஆண்டு தமிழ் நாடு சட்டமன்றத்தில், காங்கிரஸ் ஆட்சியின் மும்மொழித் திட்டத்தை நிராகரித்து தமிழ் நாட்டுக்கு இருமொழித்திட்டமே போதும் என்ற சட்டத்தை நிறைவேற்றி, இந்தி மொழியை தமிழகத்திலிருந்து ஓடோட விரட்டியடித்தவர் அண்ணா, அத்தகைய அறிஞர் காட்டிய முன் மாதிரியைப் பின்பற்றிய—தந்தை செல்வாவின் வழிநின்று — தமிழ் ஈழத்தில் சிங்களத்தை திணிக்கும் நடவடிக்கைகளை — மும்மொழித் திட்டத்தை முறியடித்திட நாமும் உறுதியேற்போம்!'

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் 28.1.78ல் நடைபெற்ற வாராந்தக் கருத்தரங்கில் பேசிய சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் குறிப்பிட்டார்,

"மும்மொழித் திட்டத்தில் அண்ணா" எனும் தலைப்பில் அவர் உரையாற்றிய இக் கூட்டத்துக்கு சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் தலைமை தாங்கினார். சுதந்திரன் ஆசிரியர் மேலும் கூறியதாவது!

"இந்தியை எதிர்த்து 1938 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் தலைமையில் தொடங்கிய மொழிப் போராட்டத்தில் பலர் தங்கள் உயிரை இழந்தனர்; சிறைகளை நிரப்பினர். முப்பதாண்டு முன் தொடங்கிய அந்தப் போராட்டம், 1965ம் ஆண்டு தமிழ் நாட்டில் மிகப்பெரிய மொழிப் புரட்சியாக வெடித்தது. 1965ம் சனவரி 26ல், இந்தி மொழி திணிப்பை எதிர்த்து எட்டுத் தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே பெற்றோல் ஊற்றி தீ மூட்டி தியாக வேள்வியில் குதித்தார்கள். தமிழ்நாட்டுச் சிறைகள் மொழிப்போராட்ட வீரர்களால் நிறைக்கப்பட்டன. கலைஞர் கருணாநிதி பாளையங்கோட்டை சிறையில் தனிமையில் அடைக்கப்பட்டார். இதுவே மொழிப்போராட்டத்தின் உச்சக்கட்டமாகும்.

இதன்பின்பு 1967ல் தமிழ் நாட்டில் திமுக ஆட்சி ஏற்பட்டபின்னர் 1968ம்ஆண்டு வரலாற்றுப்புகழ்மிக்க ஒரு சட்டத்தை அறிஞர் அண்ணா கொண்டுவந்தார். தமிழ் நாட்டு மக்களுக்கு இந்தி, ஆங்கிலம், தமிழ் என்ற மும்மொழித்திட்டம் தேவையில்லை; தமிழும் ஆங்கிலமும் என்ற இரு மொழித்திட்டம் போதும்—தமிழ்நாட்டு பாடசாலைகளில் தமிழும், ஆங்கிலமும் புகட்டப்பட்டால் போதும் என்று சட்டமியற்றி, இந்தியை தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றினார், பேரறிஞர் அண்ணா. முப்பது ஆண்டுகாலம் நடத்திய இடைவிடாதபோராட்டமே இந்த வெற்றியை அங்கு அளித்தது.

இங்கும் நமக்கு மும்மொழித்திட்டம் தேவையில்லை; நமது இனத்தின் மரபும். பண்பும் தனித்துவமும் பேணப்பட வேண்டுமானால் சிங்களத்தை நாம் நிராகரித்தே தீரவேண்டும். நமக்கு தமிழும் ஆங்கிலமும் போதும் — சிங்களம் வேண்டியதில்லை, சிங்களத்தைப் படித்தால், செந்தமிழ் காலப் போக்கில் அழியும். இந்த உண்மையை உணர்ந்து மும்மொழித்திட்டத்தை முறியடித்திட நாம் செயலில் இறங்க வேண்டும்"

## கல்வியமைச்சரின் விஜயத்தை பகிஷ்கரித்து கடையடைப்பு!

சிங்களத் திணிப்பு அமைச்சரான கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின வடமராட்சியிலுள்ள நெல்லியடிக்கு சென்றிருந்தபோது அவ்விடத்திலுள்ள கடைகள் யாவும் அடைக்கப்பட்டு தமிழ் பொதுமக்கள் பகிஷ்கரிப்பு நடத்தினர். நெல்லியடிச் சந்தியிலிருந்து அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படவிருந்தார். அதுவும் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது.

நெல்லியடியில் நடைபெற்ற இந்தப் பகிஷ்கரிப்பு கடையடைப்பு சம்பந்தமாக த. இ. பேரவையை சேர்ந்தவரும் வல்வெட்டித்துறை வாசியுமான தியாகராசா என்ற வாலிபர் பொலிசாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

## கூட்டணி செயலக வாராந்தக் கருத்தரங்கு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் செயலகத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு 4-2-78 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, அமரர் டாக்டர் நாகநாதன் நினைவு நிகழ்ச்சியாக இடம் பெறும் இக் கருத்தரங்குக்கு அடவேறு மு. ஆலாலசுந்தரம் தலைமை தாங்குவார், திருவாளர்கள் ஈழவேந்தன், கரிகாலன் ... உரையாற்றுவர்.

## வன்னியூர்க் கவிராயர் காலமானார்!



ஈழத்தின் பிரபல கவிஞரும், எழுத்தாளரும், வைத்தியருமான வன்னியூர்க் கவிராயர் (எஸ். எல். சவுந்தரநாயகம்) 29-1-78மாலை திடீர் மரணமடைந்தார். 57 வயதான இவர் வன்னிப் பகுதியின் பழம் பெரும் தமிழரசுவாதியும் த. வி. கூ. ஆதரவாளனுமாவர், சுதந்திரன் மூலமும் ஈழத்தின் எல்லாப்பத்திரிகைகள் மூலமும் வானொலி, கவியரங்குகள். கலைவிழாக்கள் மூலமும் ஈழத்தின் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தார். 'ஈழத்து இலக்கிய தீபகம்'எனும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியரான இவர் 'நாக பந்தம்' 'சக்கரபந்தம்' 'தேர்ப்பந்தம்' 'நீரோட்டம்' அன்ன சித்திரக் கவிதைகளை சர்வசாதாரணமாகப் படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். இவரது இழப்பு ஈழத்தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். கவிராயரின் பூதவுடல் நேற்று பிற்பகல் 4 மணிக்கு அவரது சொந்த ஊரான இலுப்பைக்குளத் (செட்டி குளம் பகுதி)தில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது பிரிவால் துயருறும் மனைவி மக்கள், உறவினர்அனைவருக்கும்சுதந்திரன்தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறன்.

## அறிஞர் அண்ணா நினைவாஞ்சலிக் கூட்டம்!

பேரறிஞர் அண்ணாவின் ஒன்பதாவது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டம் எதிர் வரும் 3-2-78 வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணிதலைமைச் செயலகத்தில்திரு.மு ஆலால சுந்தரம் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் வண. சிங்கராயர் அடிகள், வண. சர்வானந்தன் அடிகள், திருவாளர்கள் சி. கதிரவேற்பிள்ளை பா. உ., வி. யோகேஸ்வரன் பா. உ., வி. தர்மலிங்கம் பா.உ., திருமதி மங்கை அமிர்தலிங்கம், திருவாளர்கள் கோவை மகேசன், ஈழவேந்தன், கரிகாலன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## சட்டத் தரணி பூபாலன் விடுதலை

லஞ்சப் புகார் ஒன்றின் பேரால்கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்ட பின்னர் பிணையில் விடப்பட்டவரான சட்டத்தரணி தம்பிமுத்து பூபாலன் மீது அரசாங்கம் வழக்கு தாக்கல்செய்யாதகாரணத்தினால் அவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட மாட்டாது என்ற சட்டமா அதிபரின் அறிவித்தலுக்கு இணங்க யாழ் நீதவான் அவரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்;

திரு. பூபாலன் மீது களங்கம் ஏற்படுத்தும் நோக்குடன் வேண்டுமென்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில சக்திகள் கொடுத்த பொய்த்தகவலின்பேரிலேயே அவர் கைது செய்யப் பட்டதாக கூறப்படுகிறது.

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org